**IN THE COURT OF THE DISTRICT MUNSIF,**
**Present: Miss.D.V.Koperundevi, B.Com., LLB., (Hons),**
**District Munsif, Arni.**
**O.S. 95/2012**

2026=ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 5ம் நாள் வியாழக்கிழமை பிரதிவாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச்சட்டம் 1969, பிரிவு 3=ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறது.

D.W.1 மோகனா , வயது 85, க/பெ தனக்கோட்டி

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

சின்னராஜ் என்பவர் என் கணவரின் தம்பி என்றால் சரிதான். அவர் 16.04.1992 அன்று வா.சா.ஆ.1 ல் உள்ள வழக்கு சொத்தை அண்ணாமலையிடமிருந்து கிரையம் பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வழக்கு சொத்தை எங்கள் ஊரை சேர்ந்த கணபதி என்பவரிடம் அடமானம் வைக்கப்பட்ட விவரம் தெரியுமா என்றால் யாரும் அடமானம் வைக்கவில்லை. வா.சா.ஆ.4 ஆவணம் பதிவாகி உள்ளது என்றால் எனக்கு தெரியாது.

2. சின்னராஜ் என்பவருக்கு ராமமூர்த்தி, ஜெயமூர்த்தி, சுந்தரமூர்த்தி என 3 பிள்ளைகள் உள்ளனர் என்றால் சரிதான். சின்னராஜ் மனைவி குமாரி மற்றும் 3 பிள்ளைகள் சேர்ந்துதான் கணபதி என்பவருக்கு அடமானம் வைத்தார்கள் என்றால் அதைப் பற்றி எனக்கு தெரியாது. மேற்படி அடமான பத்திரத்தை வாதி சுந்தரமூர்த்திதான் சார்பதிவாளர் அலுவலகத்தில் பணம் கட்டி பைசல் செய்து ரசீது பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. சின்னராஜ் எப்போது இறந்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

3. சின்னராஜ் உடன் பிறந்த ஆனந்தன் தற்போது உயிரோடு இருக்கிறாரா என்றால் இல்லை, இறந்து விட்டார். அவர் இறந்து 10 வருடங்கள் ஆகிறது. ஆனந்தனுக்கு பிள்ளைகள் இருக்கிறார்கள் என்றால் சரிதான். ஆனந்தன் நான் ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கில் எனது தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளித்தார் என்றால் இருக்கிற உண்மையைதான் சொன்னார். அவர் எனக்கு பங்காளி என்ற உறவு முறையில் எனக்கு சாதகமாக சாட்சியம் அளித்தார் என்றால் பங்காளி இல்லை, அவர்தான் வீட்டில் மூத்தவர், அவர்தான் சொத்தை பிரித்து கொடுத்தார்.

4. சின்னராஜ் இறந்த பின்னர் வாதிக்கும் வாதி குடும்பத்திற்கும் அக்கு விடுதலை பத்திரம் எழுதி கொடுத்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எங்கள் ஊரை சேர்ந்த மணவாளன் என்பவரை தெரியுமா என்றால் தெரியும், 85 சென்டில் அவருக்கு 40 சென்ட் கிரையம் கொடுத்தேன். அது எந்த வருடம் என்று தற்போது எனக்கு நிலுவையில் இல்லை. மேற்படி அசல் வழக்கு 82/1997 வழக்கு நிலுவையில் இருக்கும் போதுதான் நான் கிரையம் கொடுத்தேன் என்றால் சரியல்ல, அப்போது வழக்கு எதுவும் இல்லை.

5. மேற்படி மணவாளன் என்பவரிடமிருந்து வாதி சுந்தரமூர்த்தி கிரையம் வாங்கிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை அண்ணாமலை சின்னராஜிடம் வா.சா.ஆ.8 ஆன போகியம் போட்டு அனுபவித்து வந்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அதன் பின்னிட்டு 16.04.1992 அன்று சின்னராஜ் என்பவர் கிரையம் பெற்றார் என்றால் தெரியாது. சின்னராஜ் என்பவர் தாவா சொத்தை கிரையம் பெற்றதிலிருந்து முழுவதுமாக அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல, நாங்கள்தான் அந்த இடத்தில் பயிர் வைத்து வந்தோம். எங்களுக்கு தெரியாமல் கிரையம் கொடுத்து விட்டார்கள்.

6. துளசி என்பவர் என் கணவரின் முதல் மனைவியின் மகள் என்றால் சரிதான். துளசி என்பவர் என் மீது வழக்கு தாக்கல் செய்தாரா என்றால் இல்லை. அசல் வழக்கு எண். 20/2012 என்ற வழக்கில் துளசி என்பவர் பாகப்பிரிவினை கோரி எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்தார் என்றால் சரியல்ல. துளசி என்பவர் இறந்து விட்டதால் மேற்படி வழக்கை நடத்த இயலாத நிலையில் நான் அதை சாதகமாக்கி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

7. அசல் வழக்கு எண்.82/1997 என்ற வழக்கில் என்ற வழக்கில் என் மாமனார் கூர் சீட்டின் மூலம் எனக்கு பாகப்பிரிவினை செய்து கொடுத்தார் என்ற விவரம் எனக்கு தெரியாது என்று சொல்லியுள்ளேன் என்றாலும், நான் இதை ஒரு வழக்கமாக பின்பற்றுகிறேன் என்றால் சரியல்ல. நான் பொய் சொல்வதால்தான் மேற்படி வழக்கில் எனக்கு ஆதரவாக தீர்ப்பு கிடைத்தது என்றாலும் வாதிக்கு மேற்படி விவரங்கள் தெரியாது என்றால் சரியல்ல. தற்போது வாதிதான்

அனுபவித்தில் உள்ளார், அதற்கான அடங்கல் பத்திரம் தாக்கல் செய்துள்ளார் என்றாலும், நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

8. இந்த வழக்கு சொத்தை நான் அனுபவித்து வருவதற்கான ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் நான் பயிர் வைத்து அனுபவித்து வருகிறேன். நான் பயிர் வைத்து வருவதற்கு கிராம நிர்வாக அலுவலரிடம் எந்த ஆவணமும் ஏற்படுத்தவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை சின்னராஜ் அனுபவித்து வருகிறார் என்பதற்கு ரசீதான வா.சா.ஆ.10ஐ தாக்கல் செய்துள்ளார் என்றால் மேற்படி ஆவணத்தை பொய்யாக தயாரித்துள்ளார்.

9. வாதி வழக்கை தாக்கல் செய்த பின்னர்தான் தனக்கோட்டி பெயரில் பட்டா பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. இது சம்மந்தமாக வாதி தாலுக்கா அலுவலகத்தில் பட்டா தவறாக கொடுத்துள்ளதை குறிப்பிட்டு மனு கொடுத்துள்ளார், அதை நிராகரித்து விட்டார்கள் என்றால் சரியல்ல. 7ம் பிரதிவாதி ஊரில் விசாரிக்காமல் என் கணவர் பெயரில் பட்டா வழங்கியுள்ளதை எனக்கு சாதகமாக வைத்துதான் எதிருரையை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. ஆகையால், தாவாவில் வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவடைந்தது.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the Plaintiffs / Defendants and admitted by the witness to be correct.

Sd/- D.V.Koperundevi
District Munsif,
Arni